<u>செய்தி வெளியீடு 643</u> 30.07.2010

## <u>நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் குறித்த மறுஆய்வுக் குழுவின் அறிக்கை</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நீதியரசர் திரு.எஸ்.மோகன் வழங்கினார்</u>

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 26.5.2007 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் – உச்சநீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதி ஒருவர் தலைமையில் நிபுணர் குழு ஒன்றினை அமைத்து நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்துவது என்று மேற்கொள்ளப்பட்ட முடிவினையொட்டி, உச்சநீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதி நீதியரசர் திரு. எஸ்.மோகன் அவர்களின் தலைமையில் 1.6.2007 அன்று தமிழக அரசு நிபுணர் குழு ஒன்றினை அமைத்தது.**

**நீதியரசர் திரு. எஸ்.மோகன் அவர்கள் தலைமையில் அமைந்த அக்குழு 1971ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் குறித்து ஆய்வு செய்வதற்காக 33 முறை கூடி விரிவாக விவாதித்து, பல்வேறு முடிவுகளை மேற்கொண்டது. அந்த முடிவுகள் மீதான பரிந்துரைகள் கொண்ட அறிக்கையினை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் அக்குழுவின் தலைவர் நீதியரசர் திரு.எஸ்.மோகன் தமது குழு உறுப்பினர்கள் முன்னிலையில் இன்று (30.7.2010) வழங்கினார்.**

**இந்நிகழ்வின்போது, தமிழக செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.அசோக் டோங்ரே, இ.ஆ.ப., சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி சூசன் மேத்யூ, இ.ஆ.ப., நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் முன்னாள் கூடுதல் இயக்குநர் திரு.ஆர். அன்பழகன், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைமைத் திட்ட வரைவாளர் திரு.சி.பழனிவேல் ஆகியோர் உடனிருந்தனர்.**

<u>வெளியீடு:</u>

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9